செ.வெ.எண்: 24/மார்ச் நாள்: 14.03.2016

## இராமநாதபுரம் மாவட்டத்தில்

## விளையாட்டு வீரர்கள் கலந்துகொண்ட வாக்காளர் விழிப்புணர்வு மினி மாரத்தான்

## மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்து பங்கேற்றார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் விளையாட்டு வீரர்கள் கலந்துகொண்ட மினி மாரத்தான் இன்று (14.03.2016) இராமநாதபுரம் புதிய பேருந்து நிலையத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்து பங்கேற்றார்.

2016-ஆம் ஆண்டு சட்டமன்ற பொதுத் தேர்தல் நாள் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இராமநாதபுரம் மாவட்டத்தில் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் தேர்தல் முன்னேற்பாடு பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில் வாக்களிப்பதன் அவசியம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி நூறு சதவீத வாக்குப்பதிவினை எய்திடும் வகையில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்களின் உத்தரவின் அடிப்படையில் அரசுத் துறைகளின் மூலம் பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 28 மாவட்டங்களைச் சேர்ந்த ஹாக்கி விளையாட்டு வீரர்கள் பங்கேற்ற மினி மாரத்தானை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்து பேசியதாவது:-

இராமநாதபுரம் மாவட்டத்தில் சட்டமன்ற பொது தேர்தலை முன்னிட்டு 100 சதவிகிதம் வாக்குப்பதிவு ஏற்படுத்துவதற்கு பொதுமக்களிடையே விழிப்புணர்வு உண்டாக்கிட அனைத்து நடவடிக்கைகளும் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் கல்லூரி மாணவ, மாணவியர்கள், ஆசிரியர்கள் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்கள் மூலம் வாக்காளர் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றது என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் வாக்காளர் விழிப்புணர்வு குறித்த வாசகங்கள் அடங்கிய பதாதைகளை கையில் ஏந்தியபடியும், வாக்காளர் விழிப்புணர்வு குறித்த வாசகங்களை முழக்கமிட்டும் பொதுமக்களுக்கு விளையாட்டு வீரர்கள் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

அதற்குமுன்பாக மாவட்ட ஆட்சியர் கூட்டரங்கத்தில் நடைபெற்ற தேர்தல் தொடர்பு அலுவலர்களுக்கான ஆய்வு கூட்டத்தில் சட்டமன்ற தேர்தலுக்கு நடைபெற்று வரும் பணிகளின் விவரங்களை ஆய்வு செய்தார்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.என்.மணிவண்ணன், மாவட்ட துணை காவல் கண்காணிப்பாளர் திரு.எஸ்.சர்வேஸ்ராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.எம்.அலி அக்பர், பரமக்குடி சார் ஆட்சியர் டாக்டர்.ஜி.எஸ்.சமீரன்,இ.ஆ.ப., இராமநாதபுரம் கோட்டாட்சியர் திரு.ராம்பிரதீபன், தமிழ்நாடு ஹாக்கி சங்கத் தலைவர் திரு.செல்லத்துரை அப்துல்லா, இந்திய ஹாக்கி அணி முன்னாள் விளையாட்டு வீரர் பத்மஸ்ரீ வி.ஜே.பிலிப்ஸ், மாவட்ட விளையாட்டு அலுவலர் திரு.கில்பட்ரஞ்சினியன் மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படம் : மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது.**